# இயந்திரத்தைத் தொடங்குங்கள்

கம்போஸ்டர் · தொடக்க நடைமுறை



**1** **கையுறையும் பாதுகாப்புக் கண்ணாடியும் போடுங்கள்.**

தூசி மாஸ்க், பாதுகாப்பு ஷூவும் போடுங்கள். தொளதொள உடை, நகை வேண்டாம்.



**2** **இயந்திரம் சக்கரத்தில் இல்லாமல் மவுண்ட் மேல் நிற்கிறதா எனப் பாருங்கள்.**

இல்லையென்றால், டேம்பர் நட்டைத் திருப்பி வைப்ரோ மவுண்ட்களை இறக்குங்கள்.



**3** **சக்கரங்களைப் பூட்டுங்கள்.**

இயந்திரம் நகரக் கூடாது.



**4** **பவர் பிளக்கை இயந்திரத்தில் நன்றாகச் செருகுங்கள்.**

மெயின் MCB-யிலிருந்து வரும் சிவப்பு பிளக் அது.



**5** **பிரஷால் ப்ளோவர் மெஷைச் சுத்தம் செய்யுங்கள்.**

தூசி முழுவதையும் பிரஷால் எடுங்கள்.



**6** **கம்போஸ்டிங் அறையைத் துடைத்துச் சுத்தம் செய்யுங்கள்.**

தூசி அல்லது எண்ணெய் இருந்தால் எடுங்கள்.



**7** **கிளீனிங் தட்டு வெளியே இருக்கிறதா எனப் பாருங்கள்.**

போன முறை சுத்தம் செய்தபோது உள்ளே விட்டிருக்கலாம். அரைக்கும் முன் வெளியே எடுங்கள்.



**8** ஷ்ரெடர் ஹாப்பர் தட்டைச் சரியாக வையுங்கள்.

மேல் கதவு வழியாகச் சரியாகப் பொருத்துங்கள்.



**9** எல்லாக் கதவுகளையும் மூடிப் பூட்டுங்கள்.



**10** மெயின் MCB-ஐ ஆன் செய்யுங்கள்.




**11** கீ சுவிட்சை ஆன் செய்யுங்கள்.

இது இயந்திரத்தின் பின்பக்கம் உள்ளது.




**12** 10 விநாடி காத்திருங்கள்.

ஸ்கிரீன் ஆன் ஆகி முதல் பக்கத்தைக் காட்டும்.

⚠ **இயந்திரம் தொடங்கவில்லையா? கண்ட்ரோல் பேனலுக்குள் உள்ள MCB ஆஃப் ஆகியிருக்கலாம். பேனலைத் திறக்காதீர்கள். எங்களை அழையுங்கள்.**

⚠ **ஒருவர் மட்டுமே இயந்திரத்தை ஓட்ட வேண்டும். குழந்தைகளையும் வெளியாட்களையும் தள்ளி வையுங்கள்.**

⚠ **கண்ட்ரோல் பேனலைத் திறக்கவோ வயரிங்கைத் தொடவோ வேண்டாம். மின் அதிர்ச்சி உணர்ந்தால், உடனே மெயின் MCB-ஐ அணைத்து எங்களை அழையுங்கள்.**